
# திராவிடத்தால் வாழ்கிறோம்

882

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

**116**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த கூடலரசன் (எ) தியாகராஜன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# கூடலரசன் (எ) தியாகராஜன்
# கூர்முனை, சுடுகணை எழுத்துகள்!


கழகம் தொடங்கிய காலகட்டங்களில், திராவிடர் கழகத்துடன் இரட்டைக்குழல் துப்பாக்கியாகக் கொள்கைப் பற்றுடன் இயங்கி வந்தாலும், அரசியல் கட்சியாக தி.மு.கழகத்துக்கு சவால் என்றால், கம்யூனிஸ்ட் கட்சிதான். காங்கிரஸ் பேரியக்கத்தை எதிர்த்து கழகம் வளர்ந்தாலும், களத்தில் மக்களை அணிதிரட்டுவதில் இடதுசாரிகளுடன் பெரும் சவாலை சந்தித்து வந்தது. பொதுவுடைமைத் தலைவர் தோழர் பாலன் என்கிற கே.பாலதண்டாயுதம் அவர்கள் சிறைவாழ்வு முடிந்து வெளிவந்த பின்னர், தமிழ்நாட்டு இடதுசாரி அரசியலில் புதுவேகம் எழுந்தது. பேரறிஞர் அண்ணா உள்ளிட்ட கழக முன்னோடிகளை பாலன் கடுமையாக விமர்சித்து வந்தார். அவருக்கான பதிலடிகளை அண்ணாவோ, கலைஞரோ தரவில்லை. கழக முன்னோடிகள் நடத்தி வந்த பத்திரிகைகள் வழி பதிலடிகள் அளிக்கப்பட்டன. அன்றைக்கு கம்யூனிஸ்ட்களுக்குப் பதில் தருவதற்கென்றே கழகப் பத்திரிகையாளராக திகழ்ந்தவர் தியாகராஜன் என்கிற 'கூடலரசன்'. பேரறிஞர் அண்ணா அவர்களுடன் பயணித்த, முத்தமிழறிஞர் கலைஞர் நட்பு பாராட்டிய உடன்பிறப்பு. மதுரை தொ.மு.ச. கழகத்தினர் 'அய்யா' என்றால் எளிதாக அடையாளம் கொள்வர்.

1930-ஆம் ஆண்டில், கம்பம் அருகே காமயகவுண்டன்பட்டியில் பிறந்தவர். இயற்பெயர் தியாகராஜன். அரசு ஊழியராக சேர்ந்தபின், கழகப் பணிகளுக்காக வைத்துக்கொண்ட பெயர் கூடலரசன். தான் படித்த விக்டோரியா நினைவு உயர்நிலைப்பள்ளியில் திராவிட மாணவர் கழகத்தை உருவாக்கி, அதில் செயல்பட்டு வந்தவர். 'மதுரை கருஞ்சட்டைப் படை மாநாடு' உள்ளிட்ட பல களங்களில் இளமைத் துடிப்புடன் கூடலரசன் கலந்து கொண்டுள்ளார் என்கின்றன குறிப்புகள். 'கருஞ்சட்டை அழைக்கிறது' என இவர் எழுதிய கட்டுரை அப்போதே 'குடிஅரசு' இதழில் வெளியாகி இருக்கிறது.

கழகம் தொடங்கப்பட்டபோதே, அதில் தன்னை இணைத்துக்கொண்டவர், 1950-ஆம் ஆண்டில் மதுரை சுற்றுப் பயணம் வந்த பேரறிஞர் அண்ணாவுடன் கலந்துகொண்டு அவரது அன்பைப் பெற்றவராக இருந்தார். 1950-களில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், வருவாய்த்துறைப் பணியாளராகப் பணியாற்றியவர். அந்தக் காலகட்டத்தில் சேலம் மாடர்ன் தியேட்டரில் பணியாற்றிக் கொண்டிருந்த ஆசைத்தம்பி, சி.பி.சிற்றரசு, கவிஞர் கண்ணதாசன் ஆகியோருடன் நெருக்கமானார். சக பேருந்து பயணியாக கலைஞருடன் பயணித்தவர் கூடலரசன்.

## சுடுகணை எழுத்துகள்

1950-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரை 'திராவிட நாடு', 'முரசொலி', 'தென்றல்', 'தென்னகம்', 'நம்நாடு', 'இன முழக்கம்' என கழக ஏடுகளில் அவரது கட்டுரைகள் தொடர்ச்சியாக வெளிவந்துள்ளன. 'கூடலரசன் எழுத்துகள் கூர்முனை - பொதுவுடைமையரைத் தாக்குவதில் சுடுகணை' என அவரது எழுத்து குறித்து கலைஞர் பதிவு செய்துள்ளார்.


ஓவியம் : ரவி பேலட்

ஒருமுறை கேரளாவில் நடைபெற்ற போராட்டத்தில் துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டபோது, 'திராவிட நாடு' இதழில் இவர் எழுதிய 'கம்யூனிஸ்ட் துப்பாக்கியும் சுடும்' என்கிற கட்டுரையை பேரறிஞர் அண்ணா வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்.

கழக ஏடுகள், கழக மேடைகளில் முழங்கியதன் காரணமாக, 1962-ஆம் ஆண்டில் பணி நீக்க நடவடிக்கைக்கு ஆளானார். கூடலரசன் என்கிற பெயரில் அவர் எழுதிய கட்டுரைகள், படம் ஆகியவற்றை வைத்து கூடலரசன் என்பவரும் தியாகராசன் என்பவரும் ஒருவரே என எதிர்க்கட்சிகள் புகார் அளிக்க, அவரது அரசு ஊழியர் என்கிற அடையாளம் பறிக்கப்பட்டது. அவரோ, அதற்குப்பின் முழுநேரமாக கழகப் பணிகளில் இறங்கத் தொடங்கினார்.

## 'உதயசூரியன்' இதழ் ஆசிரியர்

1962-ஆம் ஆண்டில், அன்றைய ராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் ம.சௌந்தரபாண்டியன் நடத்திய 'உதயசூரியன்' இதழுக்கு ஆசிரியராக வழிநடத்தத் தொடங்கினார். அந்த இதழைக் கவனித்துக் கொண்டே, எஸ்.எஸ்.தென்னரசு அவர்கள் நடத்திய 'தென்னரசு' இதழிலும் தொடர்ச்சியாக எழுதி வந்தார். 1967-ஆம் ஆண்டில், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் பொதுக்கூட்ட அறிவிப்புகளில் கூடலரசன் பொதுக்கூட்ட நாட்களையும் பட்டியலிட்டிருக்கிறது அன்றைய கழக ஏடாக இருந்த 'நம்நாடு'.

கட்சி அறிவித்த போராட்டங்கள், உண்ணாவிரதம், கண்டனக் கூட்டங்கள் ஆகியவற்றில் பங்கேற்கத் தவறாதவர். சிறை சென்ற அனுபவங்களும் உள்ளன. நெருக்கடி காலத்தில் எதையும் எழுதக்கூடாது என காவல் துறை அச்சுறுத்தியதுடன், ஆசிரியராக பணியாற்றிய அவரது துணைவியாருக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அதையடுத்து வீட்டை விட்டு சில நாட்கள் வெளியே தங்கி இருந்துள்ளார்.

1973-ஆம் ஆண்டு முதல் 1976-ஆம் ஆண்டு வரை மதுரையில் இருந்து வெளிவந்த 'தமிழ்முரசு' இதழின் பொறுப்பாசிரியராக சிறப்புடன் செயல்பட்டார். 1980-ஆம் ஆண்டுவாக்கில் 'முரசொலி' மதுரை பதிப்பினை கலைஞர் தொடங்கிய போது, மறக்காமல் கூடலரசனை அழைத்துக் கொண்டார் கலைஞர்.

1984-ஆம் ஆண்டு முதல் மதுரையில் கழக முன்னோடிகளுடன் இணைந்து மாவட்ட தொ.மு.ச. பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டார். மதுரை மாவட்ட திராவிடப் பஞ்சாலை தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். தொ.மு.ச. பேரவை கவுன்சில் செயலாளராக, தொ.மு.ச. ஆலோசகராக 15 ஆண்டுகளாக கழக தொழிலாளர் தோழர்களுடன் பயணித்து வந்தார் கூடலரசன்.

மேடை பிரச்சாரப் பணிகளில் வெற்றிகொண்டான், நன்னிலம் நடராசன், திராவிடமணி என முன் வரிசை பேச்சாளர்களுடனும், இதழியலில் எஸ்.எஸ்.தென்னரசு,கயல் தினகரன் ஆகிய முன்னோடிகளுடனும், தொ.மு.ச. பேரவையில், மதுரை முத்து, சண்முகம், குப்புசாமி ஆகியோருடனும் இணைந்து செயல்பட்டவர்.

அரசுப் பணியிலிருந்து விலக்கப்பட்ட பின்பு கழகத்தின் எழுத்தாளர், பேச்சாளர், பத்திரிகையாளர், இலக்கிய அணி, தொழிலாளர் அணி எனப் பல தளங்களில் தொய்வில்லாமல் இயங்கியவர். 1999-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ஆம் தேதி, சென்னையில் கழகப் பணி நிமித்தம் வந்த இடத்தில், எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் உயிரிழந்தார். அதையறிந்து கழக முன்னோடிகள், அமைச்சர்களாக இருந்த கோ.சி.மணி, மு.தமிழ்க்குடிமகன், தா.கிருஷ்ணன் என ஒட்டுமொத்த அமைச்சரவையே திரண்டு வந்து அஞ்சலி செய்தது. முத்தமிழறிஞர் கலைஞரின் இரங்கல் குறிப்பு, அவரது கூர்முனை எழுத்தை நினைவுகூர்ந்தது.

அடுத்த சில நாட்களில், மதுரை தொழிலாளர் முன்னேற்றச் சங்க பேரவை சார்பில் நடத்தப்பட்ட நினைவேந்தல் நிகழ்ச்சியில் மாவட்டக் கழகத்தினர் திரண்டுவந்து மரியாதை செய்தனர். 'நிதானம் தவறாத பேச்சாளர், கொள்கையை விட்டுக் கொடுக்காத நிர்வாகி' எனப் பெருமையுடன் அவர் நினைவுகூரப்பட்டார். அதுவே அழியாத பெருமையாக என்றென்றைக்கும் கூடலரசன் அவர்களுக்கு நிலைத்து நிற்கிறது.

**'நிதானம் தவறாத பேச்சாளர், கொள்கையை விட்டுக் கொடுக்காத நிர்வாகி' எனப் பெருமையுடன் அவர் நினைவுகூரப்பட்டார்.**

...துடிக்கும்

## அறிவிக்கப்படாத எமர்ஜென்சி!

நெருக்கடி நிலை பிரகடனத்தின் 50 ஆண்டுகள் நிறைவையொட்டி, ஒன்றிய அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நெருக்கடி நிலை காலத்தில், அரசியலமைப்புச் சட்டம் சீர்குலைக்கப்பட்டு, குடியரசு மற்றும் ஜனநாயக உணர்வு சிதைக்கப்பட்டது, கூட்டாட்சித் தத்துவம் சீர்குலைக்கப்பட்டது என தீர்மானத்தில் குற்றம்சாட்டியிருக்கிறது ஒன்றிய அரசு. அதேபோல, 'அவசரநிலை பிரகடனம் இந்தியாவின் ஜனநாயக வரலாற்றில் இருண்ட காலம்' என்று பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார்.

ஆம், நெருக்கடி நிலை இந்தியாவின் இருண்டகாலம்தான். ஆனால், 'எக்ஸ்க்யூஸ் மீ... அந்த குரங்கு பொம்மை என்ன விலை' என்ற வடிவேலு காமெடி போல உள்ளது இந்தத் தீர்மானமும் கண்டனமும் என விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன. 1975-இல் நெருக்கடி நிலையை அமல்படுத்துகிறோம் என்று அறிவித்தார்கள், ஆனால், கடந்த 11 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் எதேச்சதிகாரப் போக்குடன் மேற்கொள்ளப்பட்ட சட்டத்திருத்தங்கள், செயல்பாடுகள் யாவும் அறிவிக்கப்படாத நெருக்கடி நிலை என்பதை பா.ஜ.க.-வினர் வசதியாக மறந்துவிடுகின்றனர்.

திடீரென, ஒருநாள் பிரதமர் இரவு நேரத்தில் தொலைக்காட்சிகளில் தோன்றி புழக்கத்தில் இருந்த ஐநூறு, ஆயிரம் ரூபாய் தாள்களை ஒழித்தது எதேச்சதிகாரப் போக்கு இல்லையா? காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து உரிமையைப் பறித்தது, அரசியலமைப்புக்கு விரோதமானது இல்லையா? எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்களின் செயல்பாடுகள் கூட்டாட்சிக்கு உகந்தது தானா? ஒட்டுமொத்த நன்கொடைகளில் ஒரு கட்சியாக பா.ஜ.க. மட்டும் 50% வசூலித்துக்கொள்ள வழிவகை செய்த தேர்தல் பத்திரங்கள் முறை ஜனநாயகத்திற்கு ஆரோக்கியமானதுதானா? அமலாக்கத்துறை, வருமான வரித்துறை போன்ற தன்னாட்சி அதிகாரம் கொண்ட அமைப்புகளை, எதிர்க்கட்சிகளை ஒடுக்க ஏவிவிடுவதுதான் நியாயமானதா?

ஒன்றிய பா.ஜ.க. அரசால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இந்த நெருக்கடிகளுக்கும், அன்றைய நெருக்கடி நிலைக்கும் என்ன வித்தியாசம் என்ற கேள்விகள் சமூக வலைதளங்களில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன. வழக்கம்போல பதில் இல்லாமல் கடந்து கொண்டிருக்கிறார்கள் பா.ஜ.க. பரிவாரங்கள்.

## ஃப்ளாஷ்பேக்




அம்மன் ஏ.முனியாண்டி

### `முரசொலி'க்கு தலைவரிடம் தந்த ஆயுள் சந்தா!

2003-ஆம் ஆண்டில், 'முரசொலி' நாளிதழுக்கு ஆயுள் சந்தா சேகரிக்கும் பொருட்டு, இன்றைய கழகத் தலைவர் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதி அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது திருச்சி, சந்தன மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தளபதி அவர்களின் கரங்களில், அன்றைய மாவட்டச் செயலாளர் இன்றைய கழக முதன்மைச் செயலாளர் அண்ணன் கே.என்.நேரு முன்னிலையில் ஆயுள் சந்தா வழங்கி மகிழ்ந்த தருணம்.

**-அம்மன் ஏ.முனியாண்டி, முன்னாள் துணைச் செயலாளர், மணப்பாறை ஒன்றியம், திருச்சி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### 35 மணி நேரம் விவாதம்!

1944-ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் பேரறிஞர் அண்ணா முன்மொழிந்த முக்கிய தீர்மானங்கள் மீது 35 மணிநேரம் விவாதம் நடைபெற்றது. 'நீதிக்கட்சி' என்ற கட்சியின் பெயரை, 'திராவிடர் கழகம்' என்று மாற்றுவதற்குப் பழைய தலைவர்கள் விரும்பவில்லை. இருந்தாலும், மாநாட்டில் எவ்விதக் குழப்பமும் இல்லாமல் அண்ணாவின் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன. திராவிடர் கழகம் உருவானது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131